TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION
No.17, Third Main Road, Seethammal Colony, Alwarpet, Chennai - 600 018.
Phone : ++91-044-2435 9156 / 2435 9215 / 2432 2037 Fax : ++044-2435 4982
e-mail : tnerc@vsnl.net Website : www.tnerc.gov.in

மே 22. 2008

## செய்திக்குறிப்பு

## காற்றாலை மின் உற்பத்தியாளர்களுக்கு நிவாரணம்

## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவு

2007 ஆம் ஆண்டு நவம்பர் முதல் 2008 ஆம் ஆண்டு மார்ச் வரையில், தமிழ்நாடு மின்சார வாரியம் அமல்படுத்திய வாராந்திர விடுமுறை மற்றும் மின் பயனீட்டில் குறைப்பு போன்ற கட்டுப்பாடுகளினால், காற்றாலை மின் உற்பத்தியாளர்கள் மின்சாரத்தை உபயோகிக்க முடியாமல் போய் விட்டதாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் முறையிட்டனர். அவர்கள் மார்ச் மாதம் 31 ஆம் நாளன்று உபயோகப்படுத்தப்படாமல், கணக்கிலுள்ள மின்சாரத்தை நடப்பு ஆண்டில் பயன்படுத்திட அனுமதி கோரினர். தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கருத்தினைக் கேட்டறிந்த பின்பு, இந்த ஒருமுறை மட்டும், (one time relief) அவ்வாறு உபயோகப்படுத்தப்படாமல் கணக்கிலுள்ள மின்சாரத்தை, 2008ஆம் ஆண்டு, ஏப்ரல், மே, மற்றும் ஜூன் மாதங்களில் பயன்படுத்திக் கொள்ளுமாறு காற்றாலை மின் உற்பத்தியாளர்களுக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆணையத்தின் இந்தத் தீர்ப்பு தமிழ்நாட்டின் காற்றாலை மின்சக்தி வளத்தின் பயன்பாட்டை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(கையொப்பம்)
22.5.08
இரா. பாலசுப்பிரமணியன்
செயலாளர்